செய்தி வெளியீடு எண். 128 நாள். 05.03.2018

## மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மேல்நிலை முதலாமாண்டு அரசு பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள்

தேர்வினை நன்முறையில் நடத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் 23.02.2018 அன்று வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்து துறை, மின்வாரியத்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் மேல்நிலை, இடைநிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்வுக்குழு கூட்டம் நடைபெற்றது.

மார்ச் 2018 முதல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இத்தேர்வு 07.03.2018 முதல் 16.04.2018 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வில் மேல்நிலை முதலாமாண்டில் 20,188 ஆண்களும், 22,739 பெண்களும் ஆக மொத்தம் 42,927 தேர்வு எழுதவுள்ளனர். இதில் பூந்தமல்லி அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 28 மாணவர்களும் முகப்பேர் (மேற்கு) நேத்ரோதயா மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 5 பார்வையற்ற மாணவர்களும் தேர்வெழுதுகின்றனர். இத்தேர்வுகளுக்கு 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேல்நிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 17 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டுக்கு தனித்தனியாக அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த முதுகலை ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 68 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 113 தேர்வு மையங்களுக்கும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த முதுகலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400-க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2306 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வர். வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 31 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 62 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு மையங்கள் அனைத்திலும் வகுப்பறைகளில் குழாய் விளக்குகள், மின்விசிறிகள் நல்லமுறையில் இயங்க ஏதுவாகவும், சுகாதாரமான குடிநீரை ஒவ்வொரு தேர்வு அறை முன்பாக குடங்களில் வைக்கவும், தேர்வு மைய வளாகம், கழிப்பறைகள் போன்றவை எந்நேரமும் தூய்மையாக வைத்திருக்கவும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வர்கள் தேர்வு எழுதும் போது தேர்வைறக்குள் அனுமதிக்கப்படாத ஆவணங்கள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷு, பென்டிரைவர், பெல்ட் மற்றும் பர்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. அரசு பொதுத் தேர்வு சார்ந்து புகார்கள் ஏதேனும் இருப்பின் 1077 என்ற Toll Free எண்ணிற்கு தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது. அரசுப் பொதுத் தேர்வுகள் செம்மையான முறையில் நடத்திட முன்னேற்பாடு நடவடிக்கைகள் அனைத்தும் சிறப்பான முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**